

தூத்துக்குடி ஒன்றியம் புதுக்கோட்டையில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாமினை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் தொடங்கி வைத்து பார்வையிட்டார் உடன் ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, மாவட்ட ஆட்சியர் இளம்பகவத், கே.கே. ஆர்.ஜெயக்கொடி, பை. மூ.ராமஜெயம், தங்கதுரை பாண்டியன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் தென்காசி மாவட்டத்தில் பல்வேறு அரசுதுறை சார்பில் பயனாளிகளுக்கு பல கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்க 24-10-2025,25-10- 2025 ஆகிய தேதிகளில் தென்காசிக்கு வருகை தர உள்ளதை முன்னிட்டு 24-10-2025 அன்று சங்கரன்கோவிலில் சிறப்பான வரவேற்பு அளிப்பது தொடர்பாக தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. உடன் ச.தங்கவேலு,பரமகுரு, இல.சரவணன், மனோகரன்,ராஜதுரை, புனிதா உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### தென்காசிக்கு வருகை தரும்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

## வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. அறிவிப்பு!

தென்காசி.அக்.20

தென்காசி மாவட்டத்திற்கு வருகிற 24-10-2025 ,25-10-2025 ஆகிய நாட்களில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வருகை தர உள்ளதை முன்னிட்டு சிறப்பான வரவேற்பு அளிப்பது மற்றும் ஏற்பாடு தொடர்பாக தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் அணி அமைப்பாளர் கள்,கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ தலைமையில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ச.தங்கவேலு, பரமகுரு, மாவட்ட பொருளாளர் இல. சரவணன் மாவட்ட துணை செயலாளர்கள் மனோகரன், ராஜதுரை, புனிதா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.



திராவிட மாடல் முதலமைச்சர் கழக தளபதியார் அவர்கள் தென்காசி மாவட்டத்திற்கு வருகிற 24-10-2025,25- 10-2025 ஆகிய தேதிகளில் வருகை தர உள்ளதை முன்னிட்டு ஏற்பாடுகள் மற்றும் சிறப்பான வரவேற்பு அளிப்பது தொடர்பான ஆலோசனை கூட்டம் சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள தென்காசி வடக்கு மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ. ராஜா எம்.எல்.ஏ பங்கேற்று பல்வேறு ஆலோசனைகளை வழங்கி வருகிற 24-10-2025 அன்று கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களுக்கு சங்கரன்கோவிலில் உற்சாகமான வரவேற்பு அளிக்க வேண்டும் என்றும்.பின்னர் 25-10-2025 அன்று தென்காசியில் மங்கம்மா சாலை சந்திக்கும் இடத்தில் பெட்ரோல் பங்க் அருகில் அமைந்துள்ள ஜாஸ் ஸ்மார்ட் சிட்டி மைதானத்தில் நடைபெற உள்ள அரசு நிகழ்வில் திராவிட மாடல் முதலமைச்சர் அவர்கள் பங்கேற்று பல்லாயிரக் கணக்கான பயனாளிகளுக்கு பல கோடி ரூபாய் மதிப்பிலான நதித்திட்ட உதவிகளை ”எல்லாருக்கும் எல்லாம் என்ற அடிப்படையில் வழங்கி சிறப்பிக்க உள்ளார்கள்.இதில் கழகத்தினர் திரளாக கலந்து கொள்ள வேண்டும் என்றார்.

நிகழ்வில் பொதுக்குழு உறுப்பினர் கள் வேல்சாமிபாண்டியன்,பத்திரம் சாகுல் ஹமீது,மா. பராசக்தி, மகேஸ்வரி,ஒன்றிய செயலாளர்கள் லாலா சங்கரபாண்டியன்,கடற்கரை, அன்புக்கரசு,சேர்மதுரை, கிறிஸ்டோபர், பெரியதுரை, ராமச்சந்திரன்,வெள்ளத்துரை,நகர செயலாளர்கள் மு.பிரகாஷ், அந்தோணிசாமி,நாகூர் கனி,பேரூர் செயலாளர்கள் கே.டி.சி.குருசாமி, ரூபி பாலசுப்பிரமணியன்,மாரிமுத்து, சேது சுப்பிரமணியன், அணி அமைப்பாளர்கள் முகேஷ், கிப்ட்சன், சிவசங்கரி, அப்பாஸ் அலி, விஜயா, மாடசாமி, பிரேம் குமார், பசுபதி பாண்டியன்,சந்திரன்,முத்துராமன், சாமுவேல்,சரவணக்குமார்,கற்பகம்,

கழக நிர்வாகிகள் அண்ணாமலை, கவிதா, பொன்னுதுரைச்சி, பிரபாவதி மாரியப்பன்,கார்த்தி,ராஜராஜன், அன்சாரி, ஜலால் உள்பட கழகத்தினர், சார்பு அணிகளின் நிர்வாகி கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

### பருவ மழையை எதிர்கொள்ள

# நெல்லை மேற்கு மாநகர தி.மு.க. சார்பில் ஒருங்கிணைப்புக் குழு!

## மாநகரப் பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் அறிவிப்பு!

நெல்லை.அக்.20-

பருவ மழையை எதிர்கொள்ள நெல்லை மேற்கு மாநகர தி.மு.க சார்பில் ஒருங்கிணைப்புக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.பொது மக்களுக்கு உதவும் பணியில் ஈடுபட வேண்டும்.என நெல்லை மேற்கு மாநகர பொறுப்பாளர் சு. சுப்பிரமணியன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

நெல்லை மாநகர பகுதிகளில் பருவமழையால் பாதிக்கப்படும் பொதுமக்களுக்கு தேவையான அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்ய நெல்லை மேற்கு மாநகர தி.மு.க பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் தலைமையில் பகுதி வாரியாக ஒருங்கிணைப்புக் குழு தலைவர்கள் மற்றும் நிர்வாகி கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி நெல்லை பேட்டை கிழக்கு பகுதிக்கு பகுதி பொறுப்பாளர் நமச்சிவாயம் என்ற கோபி மற்றும் மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் அலிஃப் மீரான் 919943602232, மாநகர வர்த்தக அணி அமைப்பாளர் மகாராஜன் 9965267936,மாநகர அயலக அணி அமைப்பாளர் செந்தில்குமார் 9344095801,மாநகர நெசவாளர் அணி அமைப்பாளர் தளபதி ஆறுமுகம் 9789580386, மாநகர அயலக அணி துணை அமைப்பாளர் கணேச பெருமாள்9944628889, நெல்லை மேற்கு மாநகர மகளிர் துணை அமைப்பாளர் பிந்து செய்யது 9894578750,நெல்லை பேட்டை மேற்கு பகுதிக்கு பகுதி பொறுப்பாளர் சங்கர்,மாவட்ட வர்த்தக அணி தலைவர் அவதார் ஷாஜகான் 9442290613, மாநகர விவசாய அணி தலைவர் எஸ்.எஸ்.முத்து 9688643890,மாநகர சிறுபான்மையினர் அணி சார்லஸ் முத்து ராஜ் 9865167373,மாநகர தொழிலாளர் முன்னாள் துணை அமைப்பாளர் முத்து சுப்பிரமணியன் 9597895690, நெல்லை பேட்டை பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் சாதிக் 6385456655,துணை அமைப்பாளர்கள் மணிகண்டன் 9597944459,கோமதிநாயகம் 8778025415, தச்சநல்லூர் வடக்கு பகுதிக்கு பகுதி பொறுப்பாளர்

டாக்டர் சங்கர குமார்,மேற்கு மாநகர மாணவரணி அமைப்பாளர் வினோத்குமார்9944357369,மாநகர பிரதிநிதி சிவா 9787671258, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி முன்னாள் துணை அமைப்பாளர் சிவக்குமார் 9940095688,மாநகர அமைப்பு சாரா ஓட்டுநர் அணி துணை அமைப்பாளர் முறுக்கு கடைகணேசன் 9790072404,மாநகர தொழிலாளர் அணி முன்னாள் தலைவர் சங்கர் கணேஷ் 7448888855, மாநகர வர்த்தக அணி துணை அமைப்பாளர் கிருஷ்ணகுமார் 9442077019,மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் முருகன் 8012460666 ஆகியோர் செயல்படு வார்கள்.

மேலும்அந்தந்த பகுதிக்குட்பட்ட வட்ட கழக செயலாளர்கள்,வட்ட கழக நிர்வாகிகள்,பாக முகவர்கள், வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்கள், தி.மு.க.சொந்தங்கள் ஆகியோர் இணைந்து கள பணியாற்றுவார்கள்.

நெல்லை மாநகர பகுதிகளில் பருவமழையால் ஏற்படும் மழை நீர் தேக்கம்,மரம் விழுதல்,மின்வெட்டு, மின்கசிவு ஆகிய பாதிப்புகள் ஏற்பட்டால் நெல்லை மாநகர தி.மு.க அலுவலகத்தை தொடர்பு கொள்ள வாட்ஸ் அப் மற்றும் தொலைபேசி எண் 87547 98163 ஆகிய எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.பகுதி நிர்வாகிகள்,மாநகர பிரதிநிதிகள், வட்ட செயலாளர்கள்,நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள்,சார்பு அணிகளின் நிர்வாகிகள் வார்டு வாரியாக பருவமழை காலத்தில் பொதுமக்களுக்கு உதவும் பணிகளில் ஈடுபட வேண்டும்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



நெல்லை மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன்,ஆணையாளர் மரு.மோனிகா ராணா ஆகியோர் திருநெல்வேலி மண்டலம் காட்சி மண்டபம் அருகில் பர்வத சிங்ராஜா தெரு பகுதியில் உள்ள பெரிய மழைநீர் வடிகால் ஓடை தூர்வாரும் பணியினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். உடன் கண்காணிப்பு பொறியாளர் கண்ணன்,உதவி ஆணையாளர் நாராயணன்,உதவி பொறியாளர் தன்ராஜ் உள்பட பலர் உள்ளனர்.

## மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்கம்

## (பதிவு எண். 605/MDS, பேரவை இணைப்பு எண். 287)

# நிர்வாகிகள் தேர்தல்

### தொ.மு.ச. பேரவை அறிவிப்பு

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்கத்தின் (பதிவு எண். 605/MDS, பேரவை இணைப்பு எண். 287) நிர்வாகிகள் தேர்தல் தொடர்பான அறிவிப்பு கடந்த 28.02.2025 அன்று வெளியிடப்பட்டு வேட்பு மனுக்கள் பெறப்பட்டது. தேர்தல் ஒத்திவைக்கப்பட்டிருந்த நிலையில் அந்த வேட்பு மனுக்கள் அடிப்படையில் தேர்தலை நடத்திட 11.10.2025 அன்று அறிவிப்பு செய்யப்பட்டது. இந்நிலையில் வாக்காளர்கள், வேட்பாளர்கள் இறப்பு, பணி ஓய்வு, இடமாற்றம் காரணமாக பணிமனை பதவிகளை முழுமையாக பூர்த்தி செய்ய முடியாத நிலையை சரி செய்திட கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளதை ஏற்று வாக்காளர் பட்டியலை உரிய திருத்தங்கள் செய்தும், அதற்கேற்ப பதவிகளின் எண்ணிக்கையை மறு கணக்கீடுகள் செய்தும் புதிதாக வேட்புமனுக்கள் பெற்று தேர்தலை நடத்துவது என முடிவு செய்யப்பட்டுள்ளது. திருத்தப்பட்ட வாக்காளர் பட்டியல் தயாரித்து வெளியிட்டு புதிதாக வேட்புமனுக்கள் பெற்று கீழ்கண்ட அட்டவணைப்படி நிர்வாகிகள் தேர்தலை நடத்துவதற்கு, தொ. மு.ச. பேரவை பொருளாளர் கோ.சி. வள்ளுவன் அவர்கள் மேலிடப் பார்வையாளராகவும், வழக்கறிஞர் அ. சரவணன் (கழக தணிக்கைக்குழு உறுப்பினர்) அவர்கள் தேர்தல் ஆணையாளராகவும், ஆணையாளரால் நியமிக்கப்படும் துணை ஆணையாளர்களைக் கொண்டு பணிமனைத் தேர்தல் நடத்தப்படும்.

### தேர்தல் கால அட்டவணை
### பணிமனை நிர்வாகிகள் தேர்தல்

**வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் – (24 சந்தா பட்டியல்படி)பணிமனைகள் தோறும்) 05.11.2025, காலை 11.00 மணி**

**வாக்காளர் பட்டியல் சரி பார்த்தல் – 09.11.2025, காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை**

**இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் (பணிமனைகள் தோறும்) – 11.11.2025, காலை 10.00 மணி**

**வேட்புமனு படிவம் வழங்குதல் – 12.11.2025, காலை 10.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை**

**வேட்புமனு தாக்கல் – 13.11.2025, காலை 10.00 மணி முதல் 4.00 மணி வரை**

**வேட்புமனு பரிசீலனை – 15.11.2025, காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை**

**தகுதியான வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல் – 16.11.2025, காலை 11.00 மணி**

**வேட்புமனு திரும்பப் பெறுதல் – 17.11.2025, காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை**

**இறுதி வேட்பாளர்கள் பட்டியல் வெளியிடுதல் – 18.11.2025, காலை 11.00 மணி**

**வாக்குப் பதிவு – 23.11.2025 காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை**

பணிமனை நிர்வாகிகள் தேர்தலுக்கான வேட்புமனு படிவம் வழங்குதல், வேட்புமனு தாக்கல், பரிசீலனை, இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல், வாக்குப்பதிவு ஆகியவை அந்தந்த பணிமனைகளில் நடைபெறும். வாக்குப்பதிவு முடிந்தவுடன் வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.

ஆணையாளரின் முடிவே இறுதியானது.

பணிமனைகள் தேர்தல் முடிந்தவுடன் மத்தியச் சங்கத் தேர்தல் அறிவிப்பு மற்றும் அட்டவணை வெளியிடப்படும்.

“கலைஞரகம்”
சென்னை - 17
நாள் : 18 - 10 - 2025

**மு.சண்முகம்**
பொதுச்செயலாளர்
தொ.மு.ச. பேரவை



பரமக்குடி நகர் தெற்கு,வடக்கு மற்றும் போகலூர் கிழக்கு,மேற்கு மற்றும் பரமக்குடி மேற்கு,கிழக்கு ஒன்றியம் சார்பாக நடைபெற்ற கழக நிர்வாகிகளின் ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர், காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., செ.முருகேசன் எம்.எல்.ஏ. ஆகியோர் ஆலோசனைகளை வழங்கி நல உதவிகள் வழங்கினார். இந்நிகழ்வில் சுந்தர்ராஜ், கருப்பையா கருணாநிதி, சேது கருணாநிதி, ஜீவரெத்தினம், குணசேகரன், கதிரவன் , கிருஷ்ணமூர்த்தி, ஜெயக்குமார்,உள்ளிட்ட பங்கேற்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோட்டை பி.ஏ.ரபீக்
### அக்டோபர் 20 (1993)



இளமைக் காலத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

கோவை உக்கடம் பகுதி 35 மற்றும் 41வது வார்டு இளைஞர் அணிச் செயலாளராகவும், கோவை மாநகர் இளைஞர் அணி துணை அமைப்பாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

2007ல் திருநெல்வேலியில் நடைபெற்ற இளைஞர் அணி முதல் மாநாட்டு கொடிமேடைக்கு இவரது பெயர் சூட்டப்பட்டது

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கும்முடிப்பூண்டி கி. வேணு
### அக்டோபர் 20 (2023)



சிறுவயதிலேயே கழகத்தில் தம்மை இணைத்துக் கொண்டு பணியாற்ற தொடங்கிய இவர், கிளைச் செயலாளராகவும் – 1973 முதல் ஒன்றியச் செயலாளராக ஐந்து முறையும் – தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் – மாவட்டச் செயலாளராக நான்கு முறையும் – உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்து கழகம் வளர்த்தவர்.

1989, 1996 ஆகிய இரண்டு முறை, கும்மிடிபூண்டி தொகுதி சட்டப்பேரவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றிவர்.

“கழகம் களம் அமைத்த நேரத்திலெல்லாம், அந்தக் களத்திலே முதல் அணியின் சிப்பாய்களில் ஒருவராக இருந்து தன்னை தீயாகத்தீயிலே புடம்போட்டு எடுத்துக் கொண்டவர் தம்பி வேணு” என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.

2021ல் நடைபெற்ற முப்பெரும் விழாவில் “கலைஞர் விருது” வழங்கிச் சிறப்பித்ததோடு, “தமிழ்நாட்டின் வட எல்லையான திருவள்ளூர் மாவட்டத்தில் கழகத்தைக் கட்டிக் காத்த தீரர் அருமைச் சகோதரர் கும்மிடிப்பூண்டி கி.வேணு எத்தகைய இடர் வரினும் எதிர்த்து நிற்கும் அஞ்சாத நெஞ்சுக்குச் சொந்தக்காரர். மிசா சிறைவாசத்தில் என்னோடும், கருப்புக் கொடி போராட்டத்தில் ஈடுபட்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களோடும் சிறையில் வாடியவர் அவர்.” என கழகத் தலைவர் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**